**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 13.03.2025 |
| Case No. | : **O.S.** 93/2019 | Nationality | : Indian |
| Name | : ராஜாமணி | Religion | : |
| Father's/Husband's Name | : கோவிந்தராஜன் | Age | : 69 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

முகமது கபீர் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துளளார் என்றால் அவரது சொத்தை ஆக்கிரமித்து விட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் . நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது என்னுடைய சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . நானும் எனது மகன் ராஜசிம்மன் என்பவரும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் . முகமது கபீரின் சொத்திற்கு எந்த பக்கத்தில் எனது சொத்து உள்ளது என்றால் கிழக்கு பக்கத்தில் உள்ளது . நான் 2013 ம் ஆண்டு எனது சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான் . அதற்கு முன்பு முகமது கபீர் அவரது இடத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான் . நான் கிரயம் வாங்கிய பிறகு தான் முகமது கபீர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பது தெரியவருகிறது . எனது வழக்குரையில் நான் கிரயம் வாங்கிய பிறகு தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளது தெரியவந்துள்ளது என்பதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . எந்த தேதியில் சொத்தை அளந்தோம் என்றால் 2015 ம் ஆண்டு அளந்தோம்.

நான் கிரயம் வாங்கியபோது அளவீடு செய்து வாங்கவில்லை என்றால் சரிதான் . நான் வாங்கிய போது கட்டுமானமாக இருந்தது, அதனை இடித்து அளவீடு செய்தது போது தான் தெரியவந்தது. நான் 2014 ம் ஆண்டு இறுதியில் நான் கட்டுமானம் கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரிதான் . தற்போது அதில் கண்ணன் ஸ்டுடியோ என்ற கடை செயல்பட்டு வருகிறது.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.17 18:51:11 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.